# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**(அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ./மி.வி.(SC)/ 7–20, 30–06–2010 நாளிட்டது )**

(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டடதன் தமிழாக்கம்)

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 50ஆம் பிரிவின்படி தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பினைக் குறித்துரைத்து அறிவிக்கை செய்துள்ளது மற்றும் 2004ஆம் ஆண்டு செப்டம்பர் 1ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி VI –பிரிவு 2இல் வெளியிட்டுள்ளது என்பதாலும்,

மற்றும் நுகர்வோரிடமிருந்து முப்பது நாட்களுக்குள் கூடுதல் பிணைய வைப்புத் தொகை வசூலித்தல் குறித்த ஒருசில இடர்ப்பாடுகள் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது என்பதாலும்,

மற்றும், நுகர்வோரிடமிருந்து முப்பது நாட்களுக்குள் கூடுதல் பிணைய வைப்புத்தொகை வசூலித்தல் குறித்த இடர்ப்பாடுகளை நீக்குவதற்காக தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறை விதிகளுக்கு ஒருசில திருத்தங்களைப் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும், மற்றும் அத்தகைய திருத்தங்கள் முந்திய வெளியிட்டிற்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க முந்திய வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 181ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 50ஆம் பிரிவின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப்பிற அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன்மூலம், தமிழ்நாடு மின்வழங்கல் விதித்தொகுப்பிற்கு பின்வரும் திருத்தங்களை குறித்துரைக்கிறது :–

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :**

(அ) இந்த விதித்தொகுப்பு, 2010ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்வழங்கல் (திருத்தம்) விதித்தொகுப்பு என்று வழங்கப்பெறும்.

(ஆ) இது, 30–06–2010லிருந்து நடைமுறைக்கு வரும்.

**2. முதன்மை விதித்தொகுப்பின் 5ஆம் ஒழுங்குமுறை விதியின் திருத்தம் :**

தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பின் 5ஆம் ஒழுங்குமுறை விதியில், (5)ஆம் உள்–ஒழுங்குமுறை விதியில், (iv)ஆம் கூறுக்குப் பதிலாக பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும் ; அதாவது :–

"(iv) தற்போது இருக்கக்கூடிய வைப்புத் தொகையானது, திருத்தியமைக்கப்பட்ட பிணைய வைப்புத்தொகையைவிட குறைவாக இருக்குமானால், மீதித் தொகையானது, கூடுதல் பிணைய வைப்புத் தொகையாக வசூலிக்கப்படுதல் வேண்டும். உயர்அழுத்த மின்னிணைப்புகளைப் பொறுத்தவரை, தனிப்பட்ட அறிவிப்பு மூலமும் மற்றும் தாழ்வழுத்த மின்னிணைப்புகளைப் பொறுத்தவரை நுகர்வோர் மின் அட்டையில் தனியாகப் பதிவு செய்வதன் மூலமும் அல்லது தனிப்பட்ட அறிவிப்பு மூலமும் அத்தகைய கூடுதல் பிணைய வைப்புத் தொகை பற்றி தகவல் அளித்தல் வேண்டும். பணம் செலுத்துவதற்காக முப்பது நாட்கள் அறிவிப்புக் காலம் அனுமதிக்கப்படுதல் வேண்டும். எனினும், மின் நுகர்வோர் கோருகையில், உரிமம்தாரர், அத்தகைய கூடுதல் வைப்புத் தொகையை பட்டியலிடல் கால அளவிற்கு ஏற்றவாறு மூன்று தவணைகளில் வசூலிப்பதற்கு அனுமதிக்கப்படுகிறார் ".

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

**ரா. வெ. ராஜா**
செயலாளர்